2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதும் இன்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1983).

2. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 12/1983).

3. தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1983).

4. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 14/1983).

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"பேரவை விதி 25 (1)-ன் கீழ், பேரவை இன்று ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் மார்ச் திங்கள் 3ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10:00 மணிக்கு கூடலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் கூட்டம் இன்று ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் 3—3—1983, வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS